# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 36 /2022

Defence Witness 1

| | | | |
|---|---|---|---|
| Name | : ரெஜித் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.கிருஷ்ணன் குட்டி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of January 2025.

(Complainant and accused present. Both advocates present)

<u>எதிரி தரப்பில் முதல் விசாரணை</u> :

1. நான் இவ்வழக்கில் நீதிமன்ற சம்மன் கிடைக்கப்பெற்றதின்பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். மேற்படி சம்மன் **நீமசாஆ 1** ஆகும். நான் உடுமலை ரோடு, பாஸ்கர்நகரில் கோகோ பித் டிரேடிங் செய்கிறேன். கோகோ பித் உற்பத்தியாளரிடம் இருந்து அதை வாங்கி பிறருக்கு கொடுக்கும் ஏஜெண்ட் ஆக செயல்படுகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் எதிரியை மேற்படி தொழில் மூலமாக எனக்கு தெரியும்.

2. எதிரிக்கும் புகார்தாரருக்கும் என் மூலமாக பழக்கம் ஏற்பட்டது. எதிரிக்கும் எனக்கும் எங்கள் தொழிலுக்கு புகார்தாரர் பைனான்சியராக இருந்தார். எனக்கு சௌத் இந்தியன் வங்கி, பொள்ளாச்சி கிளையில் வங்கி கணக்கு இருந்தது. 22.07.2019 அன்று எதிரியின் வங்கி கணக்கில் இருந்து எனது வங்கி கணக்கிற்கு ரூபாய் 10 லட்சத்து 55 ஆயிரம் செலுத்தப்பட்டுள்ளது. புகார்தாரர் மேற்படி தொகையை எனக்கு செலுத்தவேண்டியிருந்தது. மேற்படி தேதியில் எனது வங்கியின் ஆன்லைன் பரிவர்த்தனையில் பிரச்சனை இருந்ததால் மேற்படி தொகையை நான் எதிரியின் வங்கி கணக்கிற்கு செலுத்தச்சொல்லியிருந்தேன். அவ்வாறே புகார்தாரரும் மேற்படி தொகையை எதிரியின் வங்கி கணக்கில் செலுத்தியிருந்தார். பிறகு மேற்படி தொகையை எதிரி 2 நாட்கள் கழித்து எனது வங்கி கணக்கில் செலுத்திவிட்டார்.

3. நான் கோகோபித் வாங்குவதற்காக மேற்படி தொகையை புகார்தாரரிடம் கேட்டிருந்தேன். அதற்காக புகார்தாரர் மேற்படி தொகையை செலுத்தினார். மொத்தம் 21.790 டன், 21.510 டன், 21.630 டன் கோகோபித் வாங்குவதற்கு புகார்தாரர் மேற்படி தொகையை செலுத்தினார். ஒரு கிலோ கோகோபித் ரூபாய் 16.25 க்கு வாங்கினேன்.

4. 20.07.2019 அன்று புகார்தாரர் செலுத்திய ரூபாய் 10 லட்சத்து 55 ஆயிரம் தொகையை நான் 03.09.2019 அன்று ஒரு கிலோ கோகோபித்திற்கு ரூபாய் 1.50 லாபம் வீதம் மொத்தம் ரூபாய் 3,86,772 மற்றும் ரூபாய் 3,81,802 மற்றும் ரூபாய் 3,83,932 ஆக செலுத்தியுள்ளேன். மேற்படி தொகைகளை புகார்தாருக்கு நான் செலுத்தியதற்கு அவர் எனக்கு ரசீதுகள் தனது கையொப்பமிட்டு கொடுத்துள்ளார்.

5. மேற்படி புகார்தாரர் ஒரு கிலோ கோகோபித்திற்கு அது வரை பெற்றுக் கொண்ட லாபமான ரூபாய் 1.50 க்கு பதில் ரூயார் 3 தருமாறு கேட்டார். அதற்கு நான் அவ்வாறு தர இயலாது என்று மறுத்துவிட்டேன். இதனால் எனக்கும் புகார்தாரருக்கும் மனக்கசப்பு ஏற்பட்டு எங்களுக்குள் இருந்த பரிவர்த்தனைகளை நிறுத்திக்கொண்டோம். பிறகு எனக்கு செலுத்தவதற்காக புகார்தாரர் எதிரியின் வங்கி கணக்கில் செலுத்திய தொகையை எதிரிக்கு கடன் கொடுத்ததாக கூறி எதிரி அவரிடம் கொடுத்து வைத்திருந்த காசோலையை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்று அறிந்துகொண்டேன்.

6. இது குறித்து புகார்தாரர் கோவை காவல் கண்காணிப்பாளர் அலுவலக்ததில் புகார் தந்து அதன்பேரில் விசாரணைக்கு மேற்படி அலுவலகத்தில் நானும் இவ்வழக்கின் எதிரியும் ஆஜரானோம். அப்பொழுது புகார்தாரருக்கு நாங்கள் ரூபாய் 11 லட்சம் தரவேண்டும் என்று கூறி போலீசார் கட்டாயப்படுத்தி என்னிடமும் எதிரியிடமும் தலா 3 காசோலைகள் பெற்றுக்கொண்டார்கள். நான் எனது தரப்பு நியாயத்தை நிரூபிக்க வேண்டி என் வசம் உள்ள ஆவணங்களை மறு முறை விசாரணையில் ஆஜர் செய்தேன். அதைப்பார்த்து போலீசார் உண்மையை தெரிந்துகொண்டார்கள்.

7. இதற்கு முன்பாக எதிரிக்கும் புகார்தாரருக்கும் எவ்விதமான வியாபாத தொடர்பும் இருந்ததில் எதிரி புகார்தாரருக்கு எந்தவித தொகையும் செலுத்த வேண்டியது இல்லை. புகார்தாரர் மொத்தம் 3 ரூபாய் ஒரு கிலோ கோகோபித்திற்கு கேட்டதால் அதை தர முடியாது என்று அவருடன் வியாபார பரிவர்த்தனையை நிறுத்திக்கொள்ளவும் எனக்கு அறிவுறுத்தினார். எனவே அந்த கோபத்தில் புகார்தாரர்

எதிரி மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி சங்கதிகள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியும்.

8. புகார்தாரர் எனக்கு தொகை செலுத்துவதற்காக எதிரியின் வங்கி கணக்கில் செலுத்திய தொகைகளுக்கு நான் கொடுத்த ரசீதுகள் - ரசீது எண்கள். 165, 166 , 167 - (3 எண்ணிக்கைகள்) - அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல்கள் **எசாஆ 2** ஆகும்.

(புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.